செ.வெ.எண். 878 நாள். 24 .11.2009

செய்தி வெளியீடு

**இன்று (24.11.2009) மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூரில் நகர்ப்புற மறுசீரமைப்பு ஆணையத்தில் சிங்கப்பூர் நிதி நகரப் பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு சிங்கப்பூர் அலுவலர்களுடன் கலந்துரையாடினார்கள். மேலும் மெரீனா வளைகுடா பகுதிகளையும் பார்வையிட்டார்கள்.**

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2008–09 ஆம் ஆண்டிற்கான தொழில்துறை மானியக் கோரிக்கை நடைபெற்றபோது கீழ்க்கண்டவாறு அறிவித்தார்கள்:

"வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், மியூட்சுவல் பன்ட் நிறுவனங்கள், பங்குச்சந்தை வர்த்தகர்கள் ஆகியோரை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும் வண்ணம் சென்னை அருகில் நிதி நகரம் ( Financial City ) ஒன்று தனியார் பங்கேற்புடன் உருவாக்க முயற்சிகள் எடுக்கப்படும். இதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை அரசு ஏற்படுத்தும்."

இந் நிதி நகர திட்டம் செயல்படுவதற்கான பணிகளை ஒருங்கினைப்பு செய்வதற்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தை (TIDCO) ஓர் ஒருங்கிணைப்பு முகமையாக அரசு நியமனம் செய்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக 19.9.2009 அன்று, காஞ்சிபுரம் மாவட்டம் சோளிங்கநல்லூர் பகுதியில் இந் நிதி நகரம் அமைவதற்கான உத்தேச இடத்தினை, மாண்புமிகு தமிழக துணை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வுசெய்தார்கள்.

22.11.2009 அன்று, மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில், தொழில்துறையின் முதன்மைச் செயலர் திரு எம்.எப்.பாரூகி, இ.ஆ.ப., பொதுப்பணித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு எஸ். இராமசுந்தரம், இ.ஆ.ப., துணை முதலமைச்சரின் செயலாளர் திரு க.தீனபந்து, இ.ஆ.ப., கூவம் நதி நிர்வாக அலுவலர் திரு பனீந்திர ரெட்டி, இ.ஆ.ப., சென்னை மாநகர மேயர் திரு மா.சுப்பிரமணியன், பொதுப்பணித்துறையின் செயற்பொறியாளர் திரு காந்திமதிநாதன் ஆகியோர் சிங்கப்பூரில் அமைந்துள்ள நிதி நகரம், அங்கு அமைக்கப்பட்டுவரும் விமான ஊர்தி சேவைப் பூங்கா, சிங்கப்பூர் நதி மற்றும் கெல்லாங் நதி ஆகியவற்றை 1977 முதல் சீரமைத்து அந்நாடு மேற்கொண்டுவரும் நதி சீரமைப்பு மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டுவர சென்றுள்ளனர். சிங்கப்பூரில் எந்தெந்த வகையில் அப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன, அந்த அனுபவத்தின் அடிப்படையில் சென்னையில் அமையவுள்ள நிதி நகரம் மற்றும் தமிழ்நாட்டில் அமைக்கப்படவுள்ள வானூர்தி சேவைப் பூங்கா மற்றும் கூவம் நதி சீரமைப்பு – மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றிற்குத் தேவையான தொழில்நுட்பம், நடைமுறைகள் ஆகியவை தொடர்பாக சிங்கப்பூரில் நேரில் பார்வையிட்டு வருகின்றனர்.

இன்று (24.11.2009) மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள் சிங்கப்பூரில் நகர்ப்புற மறுசீரமைப்பு ஆணையத்திற்குச் சென்று அங்கு பணிபுரியும் நிதி மற்றும் பங்குச்சந்தை உயர் அதிகாரிகளுடன் நிதி நகரத்தின் சர்வதேச செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்கள். மேலும், மெரீனா வளைகுடா பகுதிகளையும் பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியின்போது, தமிழக தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு எம்.எஃப்.பாரூக்கி, இ.ஆ.ப., தமிழக பொதுப்பணித்துறைச் செயலர் திரு எஸ்.இராமசுந்தரம், இ.ஆ.ப., தமிழக துணை முதலமைச்சர் அவர்களின் செயலர் திரு க.தீனபந்து, இ.ஆ.ப., மற்றும் திரு பனீந்திர ரெட்டி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை– 9